ECSL
Ethics Excellence Education

# ENGINEERING COUNCIL, SRI LANKA

No. 230, Bauddhaloka Mawatha, Colombo 07
Tel: +94 (11) 258 8811 Email: registrar@ecsl.gov.lk Web: ecsl.gov.lk

**சுற்றறிக்கை இலக்கம் 01/2021** **2021.07.28**

சகல திணைக்கள செயலாளர்கள்,

சகல அரச அமைச்சுக்களின் செயலாளர்கள்,

சகல மாகாண பிரதான செயலாளர்கள்,

சகல திணைக்களங்களினதும் தலைவர்கள்,

சகல மாவட்ட செயலாளர்கள்,

அரச நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினதும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்கள்,

சகல அரச நிறுவனங்களினதும் தவிசாளர்கள்,

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பொறியியற் தொழிலராகச் செயற்படுவதற்காக இலங்கையினுள் பொறியியற் தொழில் சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளப்படும் அனைத்து அரச, அரை அரச மற்றும் தனியார் நிறுவனங்களினதும் தவிசாளர்கள்,

சகல பிரதான நிதி உத்தியோகத்தர்கள் மற்றும்

சகல பொறியியற் தொழிலர்கள்,

## இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பொறியியற் தொழிலராக செயற்படுவதற்கான சட்ட ரீதியான பதிவு

1) இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் பொறியியற் தொழிலராக தொழிலில் ஈடுபடுத்துவதற்கு இலங்கை பொறியியற் பேரவை மூலம் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்திருக்க வேண்டுமென 2017ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கைப் பொறியியற் பேரவை சட்டவாக்கத்தின் மூலம் சட்டரீதியாக்கப்பட்டுள்ளது.

2) மேலே கூறப்பட்ட சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய, ஒரு நபர் அல்லது யாராவது ஒரு நபருக்கு பொறியியற் தொழிலராகப் பெயர் குறிப்பிடப்படுவதற்கு அல்லது பொறியியற் தொழிலராகத் தோற்றுவதற்கு அல்லது பொறியியற் தொழிலராக உத்தியோகபூர்வமாக செயற்படுவதற்கு அல்லது சேவையில் ஈடுபடுத்துவதற்கு இலங்கைப் பொறியியற் பேரவையில் பதிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயம் என்பதோடு அவ்வாறு பதிவு செய்யாத எந்த நபருக்கும் இலங்கைக்குள் தனியாக அல்லது அரச துறையில் அல்லது தனியார் துறையில் பொறியியற் தொழிலராகப் பதவி வகிப்பதற்கு அல்லது தோற்றி செயற்படுவதற்கு சட்ட ரீதியான அதிகாரம் இல்லை என சட்டமாக்கப்பட்டுள்ளது.

3) இருந்த போதிலும் எந்த ஒரு நபரும் பொறியியற் தொழிலராகத் தாமே அடையாளப்படுத்திக் கொண்டால் அல்லது அரச பணம் அல்லது நிதியங்களில் பொறியியற் தொழிலராக சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவு பெறுபவராயின், அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேவை செய்தால், அதற்கு முதல் இலங்கை பொறியியற் பேரவை சட்டத்தின் “அ” உப அட்டவணைப் பிரகாரம் உரிய தகைமைகளுக்கு அமைவாக பொறியியற் தொழிலராகப் பதிவு செய்யாமல் இருத்தல் மற்றும் உரிய பொறியியற் தொழில் வகுதியில் பதிவுப் பெயர்ப் பட்டியலுக்கு பெயரை உட்படுத்தாமல் இருத்தல் அந்த சட்டத்தின் கீழ் தடையானதும் மற்றும் சட்டத்திற்கு எதிரானதுமாகும்.

4) இலங்கை பொறியியற் பேரவை சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் ஒரு பொறியியற் தொழிலராகத் தமது சுருக்கப் பதவிப் பெயரை பயன்படுத்தினால் உரிய வகுதியின் கீழ் உரிய சுருக்கப் பெயரை பாவிப்பதற்கு உரிமையைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5) மேலே நான்காம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பொறியியற் தொழலர் என்ற வகையில் சுருக்கப் பதவிப் பெயரை பாவிப்பதற்கு சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொறியியற் பேரவையில் உரிய வகுதியின் கீழ் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

6) 2017 ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை பொறியிற் பேரவை சட்டத்தின் 'அ'' உப அட்டவணையில் காணப்படும் பொறியியற் தொழிலர்களின் தகைமைப் பட்டியலுக்கு ஏற்ப இலங்கையினுள் அரச மற்றும் தனியார் துறையில் தொழில்களுக்கு நுழைவதற்காகத் தேவையான கல்வித் தகைமைகள் மற்றும் தொழில் தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என தெரிந்து கொண்ட பின்னர் இலங்கை பொறியியற் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நபர்களை பொறியியற் தொழிலராகத் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுத்த இலங்கை பொறியியற் பேரவையால் வழங்கப்படும் அனுமதியை இலங்கை பொறியியற் பேரவையில் பதிவு செய்யப்பட்டு இருப்பது இறுதி தகைமையாவதோடு இதன் தகைமைப் பரிசீலனை இடையூறு செய்யப்படாத தொடர்ச்சியான கூட்டுத் தாபன நடைமுறையுடன் இலங்கை பொறியியற் பேரவையால் வழங்கப்படும் உத்தியோக பூர்வமானதும் மற்றும் சட்டரீதியானதுமான அனுமதியாகும்.

7) மேலே கூறப்பட்ட தகைமைப் பரிசீலனை மற்றும் பொறியியற் தொழிலராக பதிவு செய்யப்பட்டு அனுமதி வழங்கல் தொடர்பான பரிசீலனையானது மேலே கூறப்பட்ட சட்டத்தில் 3 ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் முறையில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பொறியியற் பேரவை மூலம் ஏகமனதுடன் உறுதிப்படுத்தி வெளியிடப்படும் உத்தியோகபூர்வ தொழில் அனுமதியாகும். ஆதன்படி இந்த பொறியிற் பேரவை,

<u>நேரடி உத்தியோகபூர்வ நியமனங்கள்</u>

3 (அ) (i) 1978 ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் பெயர் குறிப்பிடப்படும் பேராசிரியரின் தரத்திற்கு குறையாத பொறியியற் பீடங்களின் மூன்று பீடாதிபதிகள் அல்லது அவர்களின் தகைமையுடைய மூன்று பேர் மூலமும்

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழவின் பணிப்பாளர் நாயகம் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவர் மூலமும்,

<u>நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள்</u>

3 (ஆ) (i) இலங்கை பொறியியற் தாபன சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை பொறியியற் தாபனம் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட பட்டயப் பொறியியலாளர்கள் **7** பேர் மூலமும்,

3 (ஆ) (ii) இலங்கை ஸ்தாபிக்கப்பட்ட பொறியியலாளர்களின் நிறவனத்தின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட பல் வேறு பொறியியற் துறைகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் 4 உறுப்பினர்கள் மூலமும்,

3 (ஆ) (iii) அரச துறையில் இலங்கை பொறியியற் சேவை மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட பட்டய பொறியியலாளர் ஒருவர் மூலமும்,

3 (ஆ) (iv) மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட பொறியியற் தொழில்நுட்பவியலாளர்களின் பிரதிநிதியின் மூலமும்,

ஆகிய உத்தியோகபூர்வ நியமனத்துடன் இலங்கை பொறியியற் பேரவை மூலம் இலங்கை பொறியியற் தொழிலராகத் தெரிவு செய்து பதிவு செய்யப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டவர் ஆவார்.

8) இந்த சட்ட நிலைமை, மாற்றம் இல்லாமல் இலங்கையினுள் அரச மற்றும் தனியார் துறை போன்று சுய தொழிலில் ஈடுபட்டு மற்றும் நிறுவனமயப்படுத்தப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கும் பொறியியற் தொழிலராகப் பெயரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனைவருக்கும் உரியதாகும்.

9) அதேபோன்று, ஒரு வெளிநாட்டு பொறியியலாளர் ஒருவர் ஒரு செயற்திட்டத்திற்காக அல்லது செயற்பாட்டிற்காக இலங்கையினுள் பொறியியற் தொழிலராகத் தற்காலிகமாக செயற்பட்டாலும் மற்றும்/அல்லது தற்காலிகமாக நிலையான காலப்பகுதியில் இலங்கையினுள் சேவையில் ஈடுபடுத்தினாலும், இலங்கை பொறியியற் பேரவையில் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதற்காக அந்த பேரவையின் மூலம் பரிசீலனை செய்யப்பட்டு விதிக்கப்படும் நிபந்தனைகளின் கீழ் 4 மாதங்களுக்கு மேற்படாத காலம் உரிய விடயத்திற்காக தற்காலிக பதிவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளாமல் பொறியியற் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.

10) மேலே பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை குடியரசின் 2020.10.20 திகதிய 2198/9 ஆம் இலக்க அதி விஷேட வர்த்தமானியின் மூலம் இது தொடர்பான விதிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.


11) கோவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக அரச மற்றும் தனியார் துறையின் நிறுவனக் கட்டமைப்புக்கு உண்டான நிர்பந்தத்தைக் கவனத்திற் கொண்டு மேலே கூறப்பட்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதிவு செய்வதற்கான நிவாரண காலம் 2021 டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

12) அதன்படி மேலே கூறப்பட்ட பதிவினைப் பெற்றுக் கொள்ளாத ஒரு நபர் இலங்கையினுள் பொறியியற் தொழிலராகத் தோற்றுதல் அல்லது செயற்படுதல் சட்டத்திற்கு எதிரானது என்றும், அவ்வாறான ஒருவர் முறையான பதிவில்லாமல் சேவையில் ஈடுபடுத்திக் கொள்ளல் குற்றம் மற்றும் குற்றங்களுடன் தொடர்புடைய இடைநேர்விளைவான குற்றங்களின் கீழ் வருகின்ற, குற்றத்திற்கு உடந்தையாக இருத்தல் எனும் குற்றம் மற்றும்/அல்லது அதனோடு இணைந்த குற்றங்களுக்கு உட்பட முடியும் எனவும் குறிப்பிடப்படும்.

13) அதனால் மேலே கூறப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிட்ட பொறியியற் தொழிலர்களின் வகுதிகளுக்கிடையே ஒவ்வொரு பொறியியற் தொழிலரும் உரிய வகுதிக்கு உண்மையாகப் பதிவு செய்ய வேண்டும் என வெளியிடப்பட்டுள்ளது. அதை நோக்கி தமக்கு சொந்தமான தொழிற் சபை ஊடாக மேலே கூறப்பட்ட இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் சொல்லப்படும் விதிமுறைகளின் பிரகாரம் விண்ணப்பித்து, தகைமைகளைச் சமர்ப்பித்து இலங்கை பொறியியற் பேரவையின் பதிவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

14) அரச நிதிக்கு உரியதான வரை பொறியியற் தொழிலராக நபர்களை சேவையில் ஈடுபடுத்திக் கொள்வதற்கான ஆட்சேர்ப்பு செய்யும் நடைமுறைகளில் மற்றும் பதவி உயர்வின் போது உரியதாக்கிக் கொள்வதற்காக இந்த சுற்றறிக்கையை நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர்களுக்கும், அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கும் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர்களுக்கும் அனைத்து மாகாண பிரதான செயலாளர்களுக்கும் தொடர்பு படுத்தப்படும்.

இந்த சுற்றறிக்கை 2021.07.26 ஆம் திகதி முதல் செயற்படும் என அறிவித்துக் கொள்ளப் படுகின்றது.



எந்திரி. திலக் டி சில்வா
தலைவர்
இலங்கை பொறியியற் சபை

பிரதிகள்

1. கணக்காய்வாளர் நாயகம். தேசிய கணக்காய்வு காரியாலயம் - அ.கொ மற்றும் தே.ந
2. செயலாளர், அரச சேவைகள் ஆணைக்குழு - அ.கொ மற்றும் தே.ந
3. செயலாளர், மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு - அ.கொ மற்றும் தே.ந
4. பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் - அ.கொ மற்றும் தே.ந